ஸ்ரீ:



ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்

(ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். ஸோமயாஜி அக்னிஹோத்ரம் நாராயண தாதயார்ய மஹாதேசிக ஸ்வாமியிடம் கேட்டறிந்து தொகுத்தவை)

தொகுப்பு: ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். யஜ்ஞவராஹ தாதயார்ய மஹாதேசிகன், மங்களகிரி

==========================================================================

## அறிவுரை 4. அவசரமாகச் சரணடைமின்.

சரணாகதி பண்ணுவதற்கு அவசரப்படுங்கள்.

கடுக மோக்ஷோபாயத்திலே மூள ப்ராப்தம்.

- ரஹஸ்யத்ரயஸாரம்

நல்ல காரியத்தைத் தள்ளிப் போடாதீர். முதுமையில் பரந்யாஸம் பண்ணிக் கொள்ளலாம் என்று எண்ணி வாளாவிருக்காதீர். இதைச் சொல்லும் ஸூக்தி மேலே தரப்பட்டது. தத்வத்ரயசிந்தநாதிகாரத்தின் கடைசி வாக்கியத்தில் இந்த நீதி. இதன் அர்த்தம்:

கடுக, விரைவாக, த்வரையுடன், மோக்ஷத்திற்கான உபாயத்தைச் செய்ய வேண்டும். பக்தி, ப்ரபத்தி இவற்றுள் ஒன்றில் மூண்டிட வேண்டும்.

அதற்குக் காலம் தாழ்த்தக் கூடாது. அப்புறம் செய்துகொள்ளலாம் என்று தள்ளக் கூடியதன்று சரணாகதி. அவசரம் காட்ட வேண்டும். இப்பொழுதே ஆசார்யனை அடைந்து ப்ரபத்தி பண்ணிக்கொள்ளுங்கள்.

****************